# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com | www.facebook.com/ilakkutamilnews | https://twitter.com/Ilakku1

இதழ் 263 | சனி, டிசம்பர் 02, 2023 | 14 பக்கங்கள்


## தாயகம், தமிழகம் மற்றும் புலம்பெயர் நாடுகளில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளின் புகைப்படத் தொகுப்பு ...








தேசிய விடுதலைக் கவிஞர்

**புதுவை இரத்தினதுரை**

அவர்களின் 75வது அகவை நிறைவு 03.12.23.

வாழ்த்தி வணங்கிப் போற்றுகிறோம்.

# உலகின் கப்பல் போக்குவரத்தை கடுமையாக பாதிக்கும் தொடர் தாக்குதல்கள்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**



© 2023 இலக்கு இணையம்

## மக்கள் என்றும் உணர்வுரீதியாக ஒன்றுபடுவார்கள் என்ற செய்தியை கூறிச் சென்ற மாவீரர் நாள்




கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம் மாவீரர் நாள் நிகழ்விற்காக மிகவும் உணர்வுடன் எழுச்சி கண்டது. வழமைக்கு மாறான பல்லாயிரக்கணக்கான மக்களின் பங்கேற்பு துயிலும் இல்ல வளாகம் எங்கும் நிரம்பிக் காணப்பட்டது.

மிகவும் சிறப்பான முறையில் ஒழுங்கமைப்பு குழுவின் ஒழுங்குபடுத்தல்கள் காணப்பட்டன.

இவ்வாறான மக்கள் கூட்டம் உணர்வெழிச்சியுடன் பங்குபற்றுவது என்பது சாதாரண விடயம் அல்ல. எல்லாவற்றையும் விட அதிகமான இளவயதினரின் பங்குபற்றல் என்பது கிளிமண் தனது வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்ப்பதில் குறிப்பிடத்தக்க அளவு வெற்றியும்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## பொட்டு அம்மான் எழுத்தும் பேச்சும் புத்தகம் வெளியீடு




கடந்த திங்கட்கிழமை (27) மதுரையில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி முன்னெடுத்த மாவீரர் நாள் நிகழ்வில் உலகத் தமிழர் ஆவண மையத்தின் சார்பாக தமிழர் புலனாய்வு நாயகன் பொட்டு அம்மான் எழுத்தும் பேச்சும் புத்தகம் வெளியீடு செய்யப்பட்டது.

அண்ணன் வேல்முருகன் அவர்கள்வெளியிட, முதல்பிரதியை பம்பாய் தமிழ் சங்கத்தின் தலைவர் கணேசன் பெற்றுக்கொண்டார். இரண்டாவது பிரதியை ஆவண மையத்தின் சார்பாக மேவிதிராயர் பெற்றுக்கொண்டார், மற்றும் அனைத்து மாநில நிர்வாகிகளுக்கும் புத்தகப் பிரதி வழங்கப்பட்டது.

## தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்கின்றன

மாவீரர் வாரத்தில் தமிழ் மக்கள் அஞ்சலி செலுத்துவதை தடுப்பதற்கு இலங்கை அரசு நீதி மன்றங்களில் வழக்குகளை பதிவு செய்தும், இனந் தெரியாத நபர்கள் மற்றும் இலங்கை காவல்துறையினரை பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டும் நடவடிக்கைகளில் ஈடபட்டிருந்தபோதும், தமிழ் மக்கள் எழுச்சியுடன் தமது மாவீரர்களை நினைவுகூர்ந்திருந்தனர்.

ஆனால் தற்போது நினைவேந்தல்களில் ஈடுபட்ட சிறுவர்கள்



மீதும் இலங்கை அரசு நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் இடம்பெற்ற வணக்க நிகழ்வின்போது போரளிகள்

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்

## காலநிலை முற்றாக சீரழியும் காலப்பகுதியில் நாம் வாழ்கின்றோம் – ஐ.நா




மனிதர்களின் வரலாற்றில் இந்த வருடமே மிகவும் வெப்பமான வருடம் என டுபாயில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகிய கோப்-28 (COP28) என்ற காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் பேசிய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் அன்ரனியோ குட்ரெறஸ் தெரிவித்துள்ளார்.

காலநிலை முற்றாக சீரழியும் காலப்பகுதியில் நாம் வாழ்கின்றோம். இதனை தடுப்பதற்கு அனைத்துலகசமூகம் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

## அமெரிக்காவில் சீக்கிய தலைவரை படுகொலை செய்ய இந்தியா முயற்சி

அமெரிக்காவில் உள்ள சீக்கிய அமைப்பு ஒன்றின் தலைவரை படுகொலை செய்வதற்கு இந்திய அரசு முயன்றுள்ளதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

இந்தியாவின் சிசி-1 என்ற பாதுகாப்பு மற்றும் புலனாய்வு அமைப்பைச் சேர்ந்த ஒருவர் நிகில் குப்தா(52) என்ற நபர் தனது படுகொலை திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவில் உள்ள கூலிபடையினரை அணுகியுள்ளார். கடந்த மே மாதம் இந்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. சீக்கிய அமைப்பின் தலைவரை படுகொலை செய்வதற்கு 100,000 டொலர்களை வழங்குவதற்கு அவர் சம்மதம் தெரிவித்ததுடன், 15,000 டொலர்களை முற்பணமாகவும் கடந்த ஜுன் மாதம் வழங்கியிருந்தார்.

ஆனால் அவர் அணுகிய நபர் கூலிப்படையை சேர்ந்தவர் அல்ல, அவர் அமெரிக்காவின் போதைவஸ்த்து தடுப்பு பிரிவைச்




சேர்ந்த அதிகாரி. ஆந்த அதிகாரி சிவில் உடையில் புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபடும் ஒருவர்.

அதை அறியாத இந்திய புலனாய்வு அமைப்பு, அமெரிக்க புலனாய்வு அமைப்பிடம் வசமாக சிக்கிக் கொண்டது. குப்தாவை தொடர்ந்த அமெரிக்க புலனாய்வுத் துறைஅவரைசெக்நாட்டில்வைத்து கைது செய்துள்ளதுடன், அவரை நாடுகடத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றது.


அவரின் குற்றம் உறுதிப்படுத்தப்பட்டால் அவருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

## சீனாவில் பரவிவரும் புதுவகை நோய் – உலக நாடுகள் அச்சத்தில்

கடந்த சில வாரங்களாக சீனாவில் புதியவகை நோய் தீவிரமாக பரவி வருவதால் உலக நாடுகள் மிகுந்த எச்சரிக்கை அடைந்துள்ளதுடன், அது தொடர்பான எச்சரிக்கையை உலக சுகாதார நிறுவனமும் விடுத்துள்ளது.

சீனாவுக்கு அருகில் உள்ள நாடுகள் எற்கனவே தமது எல்லைகளை மூடி வருகையில் பீஜிங்கில் உள்ள மக்கள் மீண்டும் முகக்கவசம் அணியவேண்டும் என உலகசுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய வைரஸ் தொடர்பில் அதிக தகவல்கள் இல்லாததால் எமக்கு அது தொடர்பில் கவலைகள் அதிகரித்துள்ளன. இது புதிய வைரஸா இல்லை முன்னைய வைரஸ் பிறள்வடைந்துள்ளதா என்பது குறித்து சரியாக அறியமுடியவில்லை என தொற்றுநோய் வைத்திய அதிகாரி ஜோசப் அம்பானி




தெரிவித்துள்ளார்.

இரு வைரசுகளுக்கும் எதிராக மக்களிடம் நோயெதிர்ப்பு சக்தி இல்லை. எனவே அவை ஆபத்தானவை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவில்இந்தவைரஸ் இன்னும் பரவவில்லை எனினும் டென்மார்கில் பெருமளவான மக்கள் நிமோனியா காச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வாரம் 541 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## கட்டம் கட்டமாக பரிமாறப்படும் கைதிகள்



இஸ்ரேலுக்கும்-பாலஸ்தீனத்திற்கும் இடையில் இடம்பெற்ற மோதல்கள் கடந்த வார இறுதியில் ஒரு தணிவு நிலைக்கு வந்திருந்தது. முதலில் நான்கு நாட்களாக அறிவிக்கப்பட்ட போர் நிறுத்தம் பின்னர் நீடிக்கப்பட்டுள்ளதுடன், கட்டம் கட்டமாக இரு தரப்பும் தம்வசம் உள்ள கைதிகளையும் பரிமாறி வருகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை(30) வரையிலும் ஹமாஸ் அமைப்பு 102 கைதிகளையும், இஸ்ரேல் 210 கைதிகளையும் விடுவித்துள்ளனர். மேலும் 140 கைதிகள் ஹமாஸ் வசம் இருக்கலாம் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. கட்டார் அரசின் மத்தியஸ்த்ததுடன் இடம்பெறும் இந்த போர்நிறுத்த உடன்பாடு முன்னர் நான்கு நாட்களாக ஆரம்பிக்கப்பட்ட போதும் பின்னர் அது 7 நாட்களாக நீடிக்கப்பட்டிருந்தது.

இதனிடையே நான்காவது தடைவையாக இஸ்ரேலுக்கு வந்துள்ள அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளர் அந்தோனி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## இலங்கைக்கு சர்வதேச கண்காணிப்பாளர்களை அனுப்பவேண்டும்

### ஜஸ்மின் சூக்கா



நவம்பர் 27ஆம் திகதி தமிழர்விடுதலைப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை இழந்தவர்களை நினைவு கூருவதற்கும் கவலைகொள்வதற்கும் தமிழ் குடும்பங்களுக்கு இருக்கும் நியாயமான உரிமைகளை சிறிலங்கா அரசு தொடர்ந்தும் மீறிவருகின்றது. உண்மைக்கும் நீதிக்குமான அனைத்துல நடவடிக்கை அமைப்பின் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கடந்த திங்கட்கிழமை(27) வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2009 மே மாதத்தில் உள்நாட்டுப்போரின் முடிவில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களுக்கும் பொறுப்பானவர்கள் தொடர்பில் எவ்விதமான பொறுப்புக்கூறலையும் உறுதிப்படுத்துவதற்கு சிறிலங்கா அரசாங்கம் தவறியுள்ளமையானது, சிறிலங்காவில் தண்டனையிலிருந்து விலக்களிப்பு மேலும் அதிகரித்துள்ளதையே காட்டிநிற்கின்றது.

போர்முடிவடைந்திருந்தாலும், சிறிலங்காவிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் தமிழர்கள் மீதான துன்புறுத்தல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. பாதுகாப்புப் படைகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறையானது தனிநபர்களையும் அவர்களது குடும்பங்களையும் மட்டுமல்லாது, கூட்டுவாழ்வு, பாரம்பரியம், நம்பிக்கை ஆகியனவற்றைக் கட்டியெழுப்பும் சமூகக்கட்டமைப்பையும் சிதைக்கின்றது.

2014ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும், சித்திரவதைகளிலிருந்து உயிர்தப்பி, வெளிநாடுகளுக்குத் தப்பிவந்தவர்களின் வாக்குமூலங்களை எனது நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ளது. சிறிலங்கா புலனாய்வு அமைப்புக்கள் வடக்குக் கிழக்கில் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களைப் படம்பிடித்து, பின்னர் அவர் களிடம் சென்று, அவர்களை அச்சுறுத்தியுள்ளன.

2022 நவம்பரில் வடக்கிலுள்ள கல்லறையொன்றில் நடந்த நிகழ்வில் உரையாற்றிய ஒருவரை நாங்கள் நேர்காணல் கண்டபோது, புதிய ஜனாதிபதி இவ்வாறான நிகழ்வுகள் நடைபெறுவதை அனுமதித்திருந்தமையால், உரையாற்றுவது பாதுகாப்பானது என்று தான் எண்ணியதாகத் தெரிவித்தார். ஆனால், ஓரிரு நாட்களின் பின்னர், அவரது கருத்துச் சுதந்திரத்தையும், நடமாடும் சுதந்திரத்தையும் மீறும் வகையில், அவர் கடத்தப்பட்டு, சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டார். அவர்தன்னுடைய புதிதாகப்பிறந்த குழந்தையையும் செழிப்பாக நடந்த வியாபாரத்தையும் கைவிட்டு வெளியேறினார்.

'இந்த நினைவு நிகழ்வுகளுக்கு நிதியுதவி வழங்குவது' யார்என்று விசாரணைகளில் பாதுகாப்புப்படைகள் கேட்கின்றார்கள். இதில் முக்கியமான ஒரு விடயத்தை அவர்கள் தவறவிடுகின்றார்கள். நினைவேந்தல்களை ஏற்பாடுசெய்வதும், அவற்றில் கலந்துகொள்வதும் வெறுமனே எதிர்ப்பினை வெளிப்படுத்தும் செயல்கள் அல்ல, மாறாக, இக்கொடூரமான போரில் உயிர்தப்பிய அனைவராலும் உணரப்படும் தனிப்பட்ட துயரங்களின் வெளிப்பாடேயாகும்.

அரச ஆதரவு வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டவர்களே அவர்கள், தங்களது அன்புக்குரியவர்களின் காணமல் போதல்கள், சித்திரவதை அல்லது மரணம் ஆகியவற்றால்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

## மாவீரர் நாளில் இறைமை கொண்டு தேசமாக எழுந்த ஈழத்தமிழ் மக்கள்

ஈழத்தமிழர்களின் தாயகத்தின் தேசிய நாளும் மாவீரர் நாளுமாகிய கார்த்திகை 27 இவ்வாண்டில் ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் உலகெங்கிலும் 2009க்குப் பின் மீண்டும் தேசியத் தன்மையுடன் தேசமாக எழுந்த வரலாற்று நாளாகியுள்ளது. கனகபுரம் மாவீரர் துயிலகத்தில் 70000 ஈழத்தமிழர்கள் சிறிலங்கா அரசாங்கத்தின் நீதிமன்றத் தடைகளையும் தாண்டி மக்கள் வெள்ளத்தால் துயிலகத்தையே மூழ்கடித்தமை ஈழத்தமிழர்கள் இந்த மண் எங்களின் சொந்த மண் என்ற இறைமையின் உறுதியின் உறைவிடமாகவே இன்றும் உள்ளனர் என்பதை உலகுக்கு மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளை மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் ஈழத்தமிழ் மக்கள், நீதிமன்றம் எவ்வாறு இறந்தவர்களை நினைவு கூறுவதைத் தடுக்க இயலாதெனச் சிறிலங்கா அரசின் சட்டத்தின் மூலம் மாவீரர் நினைவேந்தலை தடுக்க முயற்சித்ததை நிராகரித்துத் தீர்ப்பளித்து எவ்வாறு மாவீரர் நாள் அமைக்கப்பட வேண்டுமெனத் தெளிவாக விதந்துரைத்ததோ, அவ்வாறு சட்டபூர்வமாகக் கட்டிய மஞ்சள் சிவப்பு கொடிகளைச் சிறிலங்காப் பொலிசார் சீருடையில் வந்து அறுத் தெறிந்து மக்கள் தங்களின் வீரச்சாவடைந்தவர் நினைவாக நாட்டிய தென்னம்பிள்ளைகளையும் சப்பாத்துக்காலால் மிதித்து அவமானப்படுத்தி மனிதநாகரிகமற்ற முறையில் உலகே வெட்கப்படத்தக்க விதத்தில் நடந்த வரலாறுகளும் பதிவாகியுள்ளன.

ஆயினும் ஈழத்தமிழ் மக்கள் எந்த அடக்குமுறைக்கும் ஆயுத அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது அதே துயிலரங்குகளில் வீரத்துணிவுடன் மாவீரர்களுக்கான வீரவணக்கத்தை திட்டமிட்டபடி முழுமையாகச் செலுத்தி சிறிலங்காவால் ஆயுதப்படைபலம் கொண்டு இனியும் தங்களின் அடிப்படை மனித உரிமைகளை வன்முறைப்படுத்த இயலாது என்பதை மிகத் தெளிவாக உலகுக்கு நிரூபித்துள்ளனர். இவ்வாறாக ஈழத்தமிழர்கள் தங்கள் தாயகம் முழுவதையும் மாவீரர் தீப ஒளி வெள்ளத்தில் ஒளிரவைத்தமை விடுதலை வாழ்வு வெகுதூரத்தில் இல்லை. தங்களின் தேசியத் தலைமையே மீண்டு எழுந்து மக்களின் கூட்டுத் தலைமைத்துவத்தை நெறிப்படுத்தி வழிப்படுத்தி தங்களை விடுவிக்கும் என்ற நம்பிக்கை ஒளியை ஒவ்வொரு ஈழத்தமிழர் நெஞ்சிலும் ஆழப்பதித்துள்ளது.

இந்த ஈழத்தமிழர் விடுதலை வாழ்வுக்கான புதிய நம்பிக்கைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் உலகத் தமிழர்களாக உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தாயகமக்களுடன் ஒருங்கிணைந்து சூரியன் நியூசிலாந்தில் உதித்தது முதல் உலகில் இருந்து அது மறையும் வரை உலகக் கோளம் முழுவதும் தேசங்கடந்துறை மக்களாக வாழும் ஈழத்தமிழின மக்கள் தங்கள் மக்கள் சக்தியை வெளிப்படுத்தி மாவீரர் நாளை பெரும் உற்சாகத்துடன் அலைஅலையாக எல்லாநாடுகளிலும் முன்னெடுத்து ஈழத்தமிழர்கள் தேசங்கடந்த பெரும் சக்திபடைத்த மக்களினம் அதனுடைய தேச நிர்மாணத்தைச் சிறிலங்காவால் நீண்டகாலத்துக்குத் தடுக்க இயலாது என்பதை உலகுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனால் இந்த நீண்டகாலத்தை குறுகிய காலமாக மாற்றுவதற்கு தடையாக தாயகத்திலும் உலகெங்கும் ஈழத்தமிழரின், உலக வல்லாண்மைகளாலும் பிராந்திய மேலாண்மைகளாலும் தங்கள் சந்தை இராணுவ நலன்களுக்காக ஈழத்தமிழரிடை தோற்றுவிக்கப்படும் பல்குழுக்கள் உள்ளன. இவ்விடத்தில் தான் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங்கொல்குறும்பு மில்லது நாடு என்ற வள்ளுவர் குறள் முக்கியமாகிறது. பல்குழத் தன்மை தோன்றினால், பாழ்செய்யும் உட்பகை உடன் பிறப்பாகும், உட்பகை தோன்றினால் அரசையே கொலைச் செயல்களால் தடுமாற வைத்து அழித்தொழிக்கும் என்பது வள்ளுவர் தந்துள்ள எச்சரிப்பு.

இந்த உத்தியைத்தான் 2009 முதல் பல வழிகளில் பல வடிவங்களில் சிறிலங்காவும் அதற்கு ஆதரவான அதன் நேசநாடுகளும் முன்னெடுத்து, இன்று வரை சிறிலங்காவை அதன் ஈழத்தமிழின இனஅழிப்புக்கான அனைத்துலக தண்டனை நீதியில் இருந்து தப்பவும் பாதிப்புற்ற ஈழத்தமிழ் மக்களுக்கு அனைத்துலக பரிகாரநீதி கிடைக்காது போகவும், இனஅழிப்பாளர்களே ஈழத்தமிழினத்தின் மேலான ஆட்சியாளர்களாகத் தொடரவும் வழிசெய்து வருகின்றனர்.

ஒரு மக்கள் இனத்தின் இறைமையும் ஒருமைப்பாடும் இணைகின்ற பொழுதே அந்த மக்களினம் தன் தாயக தேசியத் தன்னாட்சி தன்மைகள் கொண்ட தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே உருவாக்கி பாதுகாப்பான அமைதி வாழ்விலும் வளர்ச்சிகளிலும் பலம் பெற முடியும் என்பதே வரலாறு. ஈழத்தமிழர்களின் இறைமை மிகத் தெளிவான ஒன்று. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலே இலங்கைத் தீவில் வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்கள் இலங்கை முழுவதிலும் இறைமையுள்ள மக்களினம். அதனை யாராலும் எந்தக் காலத்திலும் மாற்ற இயலாது. இதனால் ஈழத்தமிழர்களின் ஒருமைப்பாட்டைச் சிதைப்பதன் மூலமே ஈழத்தமிழர்களால் தங்களுக்கான இறைமையுடன் கூடிய ஆட்சியைத் தடுக்க முடியும். இதுவே பல்குழுவாக்க உத்தியை ஈழத்தமிழினப் பகைமைகள் தங்கள் வெற்றிக்கான உத்தியாக முன்னெடுப்பதன் காரணம்.

28.11.23 இல் இலங்கையின் முன்னணித் தமிழ் ஊடகங்களில் ஒன்றான தினக்குரல் அதன் முதற்பக்கத்தில், "அரசியல் வழியில் இலட்சியத்தை நோக்கிய பயணம் தொடரும் - காணொளியில் துவாரகா பிரபாகரன் உரை?" என்னும் நிகழ்வு குறித்த சந்தேகத்திற்கான கேள்விக் குறியுடன் வெளியிட்ட செய்தியொன்று, ஈழத்தமிழர் விடுதலை உலகிலும் அரசியல் உலகிலும் இருக்கின்ற பல்குழுவாக்கத்தன்மை மேலும் விரிவுபடப் போகின்றதா? அல்லது புதிய அரசியல் பரிணாமமாக மாறப்போகிறதா? என்ற நடைமுறை அரசியல் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. சில மாதங்களாக சமூக ஊடகத்துறையில் இருந்து வந்த அரசியல் முனைவாக்கப் பிரச்சினை இப்பொழுது இலங்கை ஊடகத்துறையிலும் உள்வாங்கப்பட்ட நிலையில் இதனை ஈழத்தமிழர்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதிலேயே பல்குழுத்தன்மையின் விரிவாக்கமாகவா அல்லது புதிய அரசியல் பரிணாமம் ஒன்றின் உள்வாங்கலாகவா இது மாறும் என்பது தங்கியுள்ளது.

உணர்ச்சி வசப்படாத உரையாடல்கள் மூலமே ஈழத்தமிழர் ஒருங்கிணைப்பு முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் தெளிவாக்கப்பட்ட தேசியத்தன்மையைப் பலப்படுத்தப்பட வேண்டிய நேரமிது. ஒருங்கிணைப்பு என்பது சமுதாயத்தின் மாறுபட்ட வேறுபட்ட அனைத்தையும் அவற்றின் தேவைகளின் அடிப்படையிலும் தேடல்களின் அடிப்படையிலும் இணைத்து கூட்டொருங்கு நிலையில் அவற்றின் பலன் மக்களுக்கும் மண்ணுக்குமுரியதாக மாற்றும் பொதுவெளியை உருவாக்குவது. இதனை விடுத்து ஒருங்கிணைப்பை ஓரிணைப்பாக முன்னெடுக்கும் நேரமெல்லாம் அது பல்குழுத்தன்மைக்கு வழிவகுக்கும் என்பதையே இலக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறது. தேசியத் தலைவர் உடன் தேசியத்தன்மையுடன் விடுதலையை நோக்கிப் பயணித்த ஒவ்வொருவரது உழைப்பும் அர்ப்பணிப்புக்களும் நன்றியோடு கவனத்தில் எடுக்கப்பட்டு மாறுபட்ட விழுமியங்களை மதித்தல் என்பதன் வழி ஒழுங்குபடுத்தல் செய்யப்பட்டு மீண்டெழும் தேசியத்துடன் இணைக்கப்படுதல் முக்கியம் என்பது இன்றைய காலத்தின் தேவை என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# மாவீரர் நாள் 2023
# புகைப்படத் தொகுப்பு



கனகபுரம்


கனகபுரம்



கனகபுரம்


கனகபுரம்



அம்பலவன்பொக்கனை


அம்பலவன்பொக்கனை


அம்பாறை


ஆலங்குளம்



இரட்டைவாய்க்கால்


இரணைப்பாலை


இரணைப்பாலை


இரணைப்பாலை



இரட்டைவாய்க்கால்



இரணைப்பாலை


ஈச்சங்குளம்


ஈச்சங்குளம்


ஈச்சங்குளம்



இரணைப்பாலை


கம்பர் மலை


கம்பர் மலை


கம்பர் மலை


காரைநகர்


காரைநகர்


கிழக்குப் பல்கலைக்கழகம்


கிழக்குப் பல்கலைக்கழகம்


கொடிகாமம்


கொடிகாமம்


கொடிகாமம்


கோப்பாய்


கோப்பாய்


கோப்பாய்


கோப்பாய்


தரவை


தரவை


தரவை


தரவை



திருகோணமலை


திருகோணமலை


திருகோணமலை


துனுக்காய் ஆலங்குளம்


துனுக்காய் ஆலங்குளம்


துனுக்காய் ஆலங்குளம்


துனுக்காய் ஆலங்குளம்


துனுக்காய் ஆலங்குளம்


தேவிபுரம்


தேவிபுரம்


தேவிபுரம்


தேவிபுரம்


நல்லூர்


நல்லூர்


நல்லூர்


நல்லூர்


நல்லூர்


நல்லூர்


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மட்டக்களப்பு


மணலாறு


மணலாறு


மணலாறு



மன்னார் ஆட்காட்டிவெளி


மன்னார் ஆட்காட்டிவெளி


மன்னார் ஆட்காட்டிவெளி


வாகரை


வாகரை



மன்னார் பண்டிவிரிச்சான்


மன்னார் பண்டிவிரிச்சான்



மன்னார் பண்டிவிரிச்சான்



முல்லைத்தீவு நகர கடற்கரை


முல்லைத்தீவு நகர கடற்கரை


விசுவமடு



விசுவமடு


முள்ளியவளை



முள்ளியவளை


முள்ளியவளை


முள்ளியவளை


முள்ளியவளை


யாழ் பல்கலைக் கழகம்


யாழ் பல்கலைக் கழகம்


யாழ் பல்கலைக் கழகம்


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


வடமராட்சி கிழக்கு உடுத்துறை


வடமராட்சி கிழக்கு உடுத்துறை



வன்னி விளாங்குளம்


வன்னி விளாங்குளம்


வன்னி விளாங்குளம்


வன்னி விளாங்குளம்

# தமிழ் நாட்டில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்


திருச்சி - தமிழ்நாடு


திருச்சி - தமிழ்நாடு


மதுரை - தமிழ்நாடு


மதுரை - தமிழ்நாடு


அரசபாளையம் - தமிழ்நாடு


அரசபாளையம் - தமிழ்நாடு


தஞ்சை - தமிழ்நாடு


தஞ்சை - தமிழ்நாடு

# புலம்பெயர்ந்த நாடுகளில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகள்


நியூசிலாந்து


நியூசிலாந்து


நியூசிலாந்து


நியூசிலாந்து


சுவிட்சர்லாந்து


சுவிட்சர்லாந்து


சுவிட்சர்லாந்து


சுவிட்சர்லாந்து


டென்மார்க்


டென்மார்க்


டென்மார்க்


டென்மார்க்


அவுஸ்ரேலியா


அவுஸ்ரேலியா


அவுஸ்ரேலியா


அவுஸ்ரேலியா


பிரான்ஸ்


பிரான்ஸ்


பிரான்ஸ்


பிரான்ஸ்


யேர்மனி


யேர்மனி


யேர்மனி



யேர்மனி


இத்தாலி



இத்தாலி


இத்தாலி


இத்தாலி



நோர்வே


நோர்வே


நோர்வே


நோர்வே


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


பிரித்தானியா


ஸ்கொட்லாந்து


ஸ்கொட்லாந்து


ஸ்கொட்லாந்து


ஸ்கொட்லாந்து



கனடா


கனடா


கனடா


கனடா


நெதர்லாந்து


நெதர்லாந்து


நெதர்லாந்து


நெதர்லாந்து

# மூதூரில் பழங்குடி மக்களின் அடிப்படை வசதிகளுக்கு கூட தீர்வில்லை

ஹஸ்பர் ஏ ஹலீம்

இலங்கை நாட்டில் பல்லின மக்கள் வாழ்கின்ற போதும் இன மதம் மொழியால் வேறுபட்டாலும் பழங்குடி மக்களும் வாழ்கின்றார்கள் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கிராமமே சந்தனவெட்டை கிராமம் இக் கிராமத்தில் அதிகமான பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.



மூதூர் நகரில் இருந்து தொலைவில் அமையப் பெற்ற இக் கிராம மக்கள் பல்வேறு பின்னடைவுகளுடன் வாழ்ந்து வருகின்றார்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள உரிமைகளாக காணப்படுகின்ற மனித அரசியல் சிவில் உரிமைகள் போன்றன இவர்களுக்கும் கிடைக்கப் பெறுவது அரிதாகவே காணப்படுகிறது.

இது தொடர்பான நிலையை கருத்திற் கொண்டு விழுது ஆற்றல் மையத்தின் ஏற்பாட்டில் ஓரங்கட்டப்பட்ட சமூகத்திற்கான "இளையோரின் குரல் "என்ற தொனிப்பொருளின் கீழ் நடமாடும் சேவையொன்று 21.11.2023 ந் திகதியன்று குறித்த கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்க கட்டிடத்தில் இடம் பெற்றது.

பழங்குடி மக்களது ஜீவனோபாயமானது மிகவும் பின்னடைந்துள்ள நிலையில் சமூகமயமாக்கப்படாமை அம் மக்கள் அதற்குள் செய்வதறியாது தடுமாறுகின்றனர். அரச சேவையை பெறுவது முதல் பல இன்னோரன்ன சட்ட ரீதியான ஆவணங்களை பெற முடியாது வாழ்கின்றார்கள். இது தவிர பல விழிப்புணர்வற்ற நிலை காரணமாக பல்வேறு சமூகப் பிரச்சினைகளும் அங்கு இருந்து வருகின்றது.



பெண்கள் சிறுவர்கள் பாதுகாப்பின்மை ,கல்வி,மந்தபோசனை,பால் நிலை சார்ந்த பல பிரச்சினைகளை தீர்க்கவும் சேவை வழங்குனர்களையும் வசதிப்படுத்தக்கூடிய வளங்களை இணைப்பு செய்ய கூடியதுமாக குறித்த நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

அன்றைய நடமாடும் சேவையில் சம்பூர் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவு உத்தியோகத்தர்கள், மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக பதிவாளர் கிளை மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் மதஸ்தல உறுப்பினர்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களின் உறுப்பினர்கள் என பலரது ஒத்துழைப்புகளோடு இடம் பெற்றதோடு பிறப்பு, அடையாள அட்டை விவாக பதிவு போன்றன அம் மக்களுக்கான சேவைகளாக திறம்பட இடம் பெற்றது.

ஆரம்ப கட்டமாக பிள்ளையின் பிறப்பு முதல் பிறப்பு சான்றிதழ் கூட பலருக்கு இல்லாத நிலை இங்கு காணப்படுகிறது. இளவயது திருமணம் அதிகரித்தும் காணப்படுகிறது. இது போன்ற விழிம்பு நிலை மக்களின் துயர் துடைக்க பழங்குடி என்கின்ற மக்கள் என்பதை ஒதுக்காது சேவைகளை வலுப்பெறச் செய்ய வேண்டும் என்பதே அம் மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது. பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சுகாதார சீர்கேடு உட்பட ஆரோக்கியமான வாழ்வு தொடர்பான விழிப்புணர்வும் இதன் போது இடம் பெற்றதுடன் குடும்ப நல உத்தியோகத்தர் திருமதி பிரவீனா அவர்களால் இளவயது திருமணம்,இளவயதில் கர்ப்பம் தவிர்த்தல், மந்த போசாக்கு போன்ற பல விடயங்களை அணுகுவதற்கு தங்களது களவிஜயத்தின் போது பெற்றார்கள் தங்களை அணுகுவதும் குறைவாக காணப்படுவதாகவும் தெரிவித்தார். இது தவிர பாடசாலை இடைவிலகல் போன்றனவும் கல்வியில் பல பின்னடைவுகளை ஏற்படுத்துகிறது.



பல தரப்பட்டவர்களுக்கான பிறப்பு சான்றிதழ் அற்ற நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் இவ்வாறான நிலை இனிமேலும் இருக்கதக்கவாறான சேவை அம் மக்களுக்கு கிடைக்க வேண்டும் ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ள உரிமை அம் மக்களுக்கும் கிடைக்க வழிசெய்ய வேண்டும் இதற்காக துறைசார் அரச நிறுவனங்கள் முன்வர வேண்டும். இக் கிராம மக்களின் உட் கட்டமைப்பு வசதிகள் தொடக்கம் பல வீதிகள் உட்பட அபிவிருத்திகளிலும் புறக்கணிப்பு செய்யப்படுவதாக அம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய சமூகத்துடனான உறவாடல் இன்றிய நிலையில் பழங்குடி என்ற நிலைக்குள் வாழ்க்கை நடாத்தினாலும் இம் மக்களின் சகல உரிமைகளும் சுதந்திரங்களுடனும் வாழ வைக்க வேண்டும். பல்வேறுபட்ட இக்கட்டான சூழ் நிலை இம் மக்களை பெரிதும் பாதித்துள்ளது நாட்டில் ஏற்பட்ட அண்மைய பொருளாதார நெருக்கடி உட்பட தற்போது வரை பல கஷ்டங்களுடன் இம் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

"பல வருட காலமாக அடையாள அட்டை இன்றி காணப்பட்ட நான் தற்போது இந்த நடமாடும் சேவை மூலமாக விண்ணப்பித்துள்ளேன். இதன் மூலம் அடையாள அட்டை கிடைக்கும் என நம்புகிறேன் இது தொடர்பில் முன்னர் எப்படி பெறுவது என்று தெரியாமலும் இருந்தது. எனவே இந்த விழுது நிறுவனத்துக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்" என நடமாடும் சேவையின் மூலம் பயனடைந்த குறித்த கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

வளங்களை இணைப்புச் செய்வதன் மூலமும் மக்களுக்கான அரச சேவைகளை பெற்றுக் கொடுக்க முடியும் என்பதை விழுது போன்ற இளையோருக்கான குரல் எடுத்துக்காட்டியுள்ளது. மக்கள் பிரச்சினைகளை சமுதாய நிறுவனங்கள் இணைந்து கூட்டாக தீர்க்க முயற்சி எடுக்க முடியும். அது போன்ற கட்டமைப்புக்களை இக் கிராமத்தில் வலுப்படுத்த வேண்டும்.



கிராம அபிவிருத்தி சங்கம்,மகளிர் அபிவிருத்தி சங்கம் உட்பட பல அமைப்புகளின் வலுவூட்டல் மூலமாக மக்களை விழிப்புணர்வுள்ளவர்களாக மாற்றியமைத்து அவர்களது உரிமைகளுக்கு செவிமடுத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக காணப்படுகிறது.

"பலருக்கு இந்த கிராமத்தில் பிறப்புச் சான்றிதழ் இல்லை. இதன் மூலமாக கிடைக்கும் என நம்புகிறேன். இது போன்று இன்னும் பல சேவைகளை இங்கு செய்ய வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறோம்" என குறித்த கிராமத்தின் பெண்மணி அந்த நடமாடும் சேவையில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு தெரிவித்தார். தங்களது தேவை கருதி மூதூர் நகருக்கு செல்வதாயின் பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டும் என்பதுடன் சீரான போக்குவரத்து வசதியின்மையும் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் சிறுபான்மை இன தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் சரியாக சமமாக மதிக்கப்பட்டு செயற்படக்கூடியவாறு இருக்க வேண்டும்.

இம் மக்களின் வாழ்வும் ஏனைய மக்களின் வாழ்வும் வித்தியாசமானது. இது தொடர்பில் தேவை நலன் கருதி துரிதமான சேவைகளை அம் மக்கள் எதிர்பார்த்து காத்து நிற்கின்றனர்.

• • •

## காலநிலை முற்றா ... தொடர்ச்சி ...

அவர்களின் தற்போதைய பங்களிப்பு போதாது. அந்தாட்டிகாவில் உள்ள பனிப்பாறைகளின் அளவு மிகவும் குறைந்துள்ளது. கடல் மட்டம் உயர்ந்து வருகின்றது, அதிக வெள்ளப்பெருக்கு, மற்றும் காட்டுத் தீ என்பனவும் இந்த வரும் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் வெப்பநிலையே வரலாற்றில் அதிகமானது என உலக காலநிலை அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளது. மேலும் அடுத்த வருடம் தற்போதைய விட அதிகரிக்கலாம் எனவும் அது மேலும் தெரிவித்துள்ளது.

டுபாயில் இடம்பெற்றுவரும் இந்த மாநாட்டில் பல நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், காலநிலை செயற்பாட்டாளர்கள் என 70,000 இற்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ளனர்.

தான் வாழும் ஹிமாலையா பிரதேசத்தில் அதிக மாற்றங்கள் நிகழ்வதை தன்னால் காணக் கூடியதாக உள்ளதாக நேபாளத்தை சேர்ந்த 17 வயதாக சிரேயா தெரிவித்துள்ளார்.

# மாவீரர்களின் ஆத்மா உங்களை ஒருபோதும் மன்னிக்காது

மட்டு.நகரான்

எங்கள் பிள்ளைகள் இந்த மண்ணைப் பாதுகாக்க மாவீரர்கள் ஆனார்கள். அவர்கள் சுமந்த கனவுகளை யாரும் நாசமாக்கிடாதீங்க. இங்கு தமிழர்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்று தான் எங்கள் பிள்ளைகள் களமுனைக்கு போய் வித்தாகினார்கள். அவர்கள் நாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்றுதான் மாவீரர்களானார்கள். அவர்களின் கனவை யாரும் மறந்திடாதீங்க ஐயா என அண்மையில் மட்டக்களப்பு மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வில் இரண்டு மாவீரர்களைப்பெற்ற தாய் ஒருவர் அழுதவாறு தெரிவித்தார்.



நாங்கள் எங்களது மண்ணுக்காக உயிர் நீத்த பிள்ளைகளை நினைவுகூருகின்றோம். உங்களது சிங்கள மக்கள் உயிர்நீத்தால் நீங்கள் நினைவு கூருவதுபோன்று நாங்கள் எங்கள் பிள்ளைகளை நினைவுகூருகின்றோம். நாங்கள் எங்கள் பிள்ளைகளை நினைவுகூருவது எங்கள் உரிமை. அதனை நீங்கள் எங்களுக்கு தரதேவையில்லை. நாங்கள் எங்களது நிலத்தில் எங்களது பிள்ளைகளை நினைவுகூருவது எங்களது கடமை.எங்களது கடமையில் தலையிடுவதற்கு நீங்கள் யார் என்று வெல்லாவெளியில் நடைபெற்ற மாவீரர்கள் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் பொலிஸார் விளைவித்த குழப்பத்தின்போது பல மாவீரர் பெற்றோர் பொலிஸாருடன் ஏற்பட்ட முரண்பாட்டின்போது கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதேபோன்று எங்களுக்கு புலம்பெயர் நாட்டில் உள்ள தேசியப்பற்றாளர்கள் ஒன்றும் செய்யாவிட்டாலும் எங்கள் மாவீரர்களை நினைவு கூருவதற்கு எங்களுக்கு சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி தாருங்கள்.எங்களுக்காக உயிர்நீர்த்த எங்களது உறவுகளை நினைவுகூருவதற்கு எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தினைப்பெற்றுத்தாருங்கள்.



“வருடத்தில் ஒரு நாள் நடக்கும் நிகழ்வில் நாங்கள் சுதந்திரமாக எங்களது உறவுகளை நினைவுகூரச் சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தித் தாருங்கள்” என்று திருகோணமலை மாவட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் தளபதி யொருவரின் மகள் கடந்த 27 ஆம் திகதி மாவீர் தினத்தன்று கண்ணீர்மல்க இந்த கோரிக்கையினை விடுத்திருந்தார்.

மாவீரர் நாளில் எனது அப்பாவை நினைத்து எனக்கு தெரிந்த மாமாக்கள்,அண்ணாக்கள், அக்காக்களை நினைத்து துயிலும் இல்லத்திற்கு சென்று மாலை போட்டு ஒவ்வொரு ஆண்டும் விளக்கேற்றி வந்தேன்.

இந்நிலையில் இவ்வருட மாவீரர் நாள் நினைவேந்தலுக்காக சென்ற போது மூதூர் - சம்பூர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் வைத்து எங்களை திருப்பி அனுப்பினர், திரும்பி போக மாட்டோம் என சொன்னவர்களை கையை பிடித்து இழுத்து பொலிஸ் வாகனத்தில் ஏற்ற முற்பட்டனர்” எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

வடக்குக் கிழக்கில் இந்த மண்ணுக்காகத் தங்களை ஆகுதி யாக்கிய மாவீரர்களை நினைவுகூர்ந்து மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. வடக்கினைப்பொறுத்தவரையில் மாவீரர்துயிலும் இல்லங்களில் அமைதியான முறையில் எழுச்சியுடன் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்ற அதேநேரம் கிழக்கில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் போர் கோலம் கொண்ட நிலையில் மாவீரர் தின நிகழ்வு கள் அனுஸ்டிக்கப்பட்டன.



வடக்கில் சுதந்திரமாக மாவீரர் தின நிகழ்வுகளைநடாத்துதற்குதடைகளைஏற்படுத்தாத சிங்கள காவல்துறையினர் கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களை போர்க்கோலமாக்கியது ஏன் என்ற கேள்வி இன்று கிழக்கு மக்கள் மத்தியில் எழுந்துநிற்கின்றது.வடக்கில் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் விடுக்கப்பட்ட தடைசெய்யும் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்ட நிலையில் பொலிஸார் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு எந்த தடையும் ஏற்படுத்தாத அதேவேளை கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு பொலிஸாரினால் நீதிமன்றங்களில் கோரப்பட்ட தடைகள் நிராகரிக்கப்பட்டபோதிலும் அதனையும் மீறி துயிலும் இல்லங்கள் மீது அடாவடித்தனமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

குறிப்பாக கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபராக அஜித்ரோகன நியமிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கில் தமிழ் தேசியம்சார்ந்த மாவீரர் நினைவுதினம் சார்ந்த சிங்கள அத்துமீறிய செயற்பாட்டாளர்களுக்கு எதிரான போராட்டங்கள் சார்ந்த செயற்பாடுகளுக்கு கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் தென்னிலங்கை இனவாதிகள் மத்தியில் தன்னை ஒரு இனவாதியாக பொலிஸ் அதிகாரி ஒருவர் காட்டமுற்படுகின்றாரா என்ற சந்தேகம் ஒரு புறம் இருந்தாலும் மறுபுறம் கிழக்கு மீட்பு என்ற தோரணையில் இலங்கை அரசின் கைக்கூலிகளாக செயற்படும் பிள்ளையான் போன்றவர்களின் அரசியல் நிலைக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலையில் காவல்துறையினைக்கொண்டு இவ்வாறான நிகழ்வுகளை தடுப்பதற்கான முன்னெடுப்புகளும் முன்னெடுக்கப்பட்டன.

இவை அனைத்தையும் தாண்டி,சிங்கள காவல்துறையின் அடாவடித்தனங்கள், தடைகளையும் தாண்டி ஆயிரக்கணக்கில் ஒன்றுதிரண்ட மக்கள் இம்முறை கிழக்கில் மாவீரர் தினத்தை அனுஸ்டித்துநிற்கின்றார்கள்.இந்த ஒன்றிணைவு கிழக்கு மாகாணத்திலிருந்து சிங்கள தேசத்திற்கும் சர்வதேச சமூகத்திற்கும் தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

வடகிழக்கு தமிழர்களின் தாயகம். தமது தாயகத்தினை கூறுபோடுவதற்கோ தமது தாயகத்தினை அபகரிப்பதற்கோ இடமளிக்க முடியாது.மாவீரர்களின் தியாகங்களை யாரும் கொச்சைப்படுத்தவோ அவர்களின் தியாகங்களை மறந்தோ யாரும் செயற்படமுடியாது என்பதை மீண்டும் நிரூபித்துள்ளது.



இதன்காரணமாகவே சிங்கள தேசம் கிழக்கில் மாவீரர் தினத்தை ஒடுக்குவதற்கு முயற்சியினை முன்னெடுத்தது.

கிழக்கில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் சிங்கள பேரினவாதத்தின் அடாவடித்தனங்கள் என்பது தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் தமிழர்கள் மத்தியிலும் பாரிய உணர்வலைகளை ஏற்படுத்திவருகின்றது.

இதன்காரணமாகவே மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு ஆயிரக்கணக்கானவர்கள் ஒன்று திரண்டுவந்ததையும் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிங்கள காவல்துறையுடனும் முரண்பட்டதையும் காணமுடிந்தது.கடந்த காலத்தில் அச்சம் காரணமாக நேருக்கு நேர் நின்ற கதைக்காதவர்கள் இன்று நேருக்க நேர் நின்று போராடும் நிலை காணப்படுகின்றது. இந்த நிலைமையினை சிங்கள தேசம் அவதானமாக கையாளாவிட்டால் எதிர்காலத்தில் இந்த நாட்டில் மீண்டும் ஒரு போராட்ட நிலை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றன.



அண்மையில் மட்டக்களப்பில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் மற்றும் செயலாளர் நாயகம் ஆகியோர் விடுத்த அறிவிப்புகள் இன்று வடகிழக்கு இளைஞர்களின் உள்ளக்கிடங்கைகளை வெளிப்படுத்தி நிற்கின்றது. அடக்குமுறைகள் நெருக்குதல்கள் அதிகரிக்கும்போது,அந்த அடக்குமுறைகளுக்கு எதிராக வீறுகொண்டு எழுகின்ற நிலைப்பாடுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்திருந்தார்.

இதேபோன்று உங்களுடன் நாங்கள் இணைந்துவாழ விரும்பவில்லையென்றால் எங்களை பிரித்துவிடுங்கள் நாங்கள் நிம்மதியாக வாழ்கின்றோம் என்று அக்கட்சியின் செய லாளர்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# அலட்சியப்படுத்தப்பட்ட சமூகம்

**துரைசாமி நடராஜா**

மலையக மக்கள் இலங்கைக்கு வருகைதந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளதை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.இந் நிகழ்வுகளின் ஊடாக மலையக மக்களின் வாழ்வியல் நிலைமைகளை பிரதிபலிக்கும் பல்வேறு விடயங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. மேலும் அம்மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் ஏனையோர் விளங்கிக் கொள்ளும் ஒரு வாய்ப்பும் இதனால் ஏற்பட்டது என்பதனை மறுப்பதற்கில்லை. இந்த நிலையில் இம்மக்களின் அபிவிருத்தி கருதி காத்திரமான முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் ஆழமாகவே வலியுறுத்தப்பட்டு வருகின்றன.



இதனிடையே மலையக மக்களின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் அரசாங்கம் செயற்படவுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளதோடு பெருந்தோட்டத்துறையில் புரட்சிமிக்க மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாகவும் வலியுறுத்தி இருக்கின்றார்.

இது சாத்தியப்படவேண்டுமென்பது அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ள நிலையில் கடந்தகால வாக்குறுதிகளைப் போன்று செயல்வடிவமற்ற ஒரு வாக்குறுதியாக இதுவும் அமைந்துவிடக்கூடாது என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும்.

மலையக மக்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கூலித் தொழிலாளர்களாக தமிழகத்திலிருந்து இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட வரலாறு மிகவும் சோகமானதாகும். அவர்கள் இங்கு அழைத்து வரப்பட்ட காலம்முதலே அவர்களின் நலன் கருதி பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக வாக்குறுதிகள் பலவும் வழங்கப்பட்டன. என்றபோதும் அவ்வாக்குறுதிகளில் பெரும்பாலானவை காற்றில் பறக்கவிடப்பட்டதையே அதிகமாக அவதானிக்க முடிந்தது.

போதாக்குறைக்கு உலகின் பல நாடுகளிலும் தீவுகளிலும் குடியேற்றப்பட்ட தமிழக கூலித்தொழிலாளர்கள்கொடூரமானசுரண்டல்கள் பலவற்றுக்கும் உள்ளாக நேர்ந்தமையும் புதிய விடயமல்ல. அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டு முதலில் பிரித்தானிய, பிரான்சிய ஆட்சியாளர்களாலும், பின்பு சுதேச ஆட்சியாளர்களாலும் ,அந்தந்த நாடுகளையும் தீவுகளையும் சேர்ந்த சுதேச இனத்தவர்களாலும், தொழிலாளர்களல்லாத ஏனைய தமிழர்களாலும்,ஏனைய இந்தியர்களாலும், வணிகர்கள், அதிகாரிகள், தோட்ட உத்தியோகத்தர்கள், பிற அலுவலர்கள் போன்ற பலராலும் தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் கொடூரமாக சுரண்டப்பட்டதாக கலாநிதி க.அருணாசலம் போன்றவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உலகின் பல நாடுகளிலும் இவ்வாறாக குடியேற்றப்பட்ட தமிழ் தொழிலாளர்களில் அநேகமானவர்கள் இன்று தமிழ் பேசவோ, எழுதவோ,வாசிக்கவோ தெரியாத நிலையில் காணப்படுவதோடு, பலர் சுதேச இனத்தவர்களுடன் கலப்புற்று விட்டதாகவும் தெரியவருகின்றது. அவ்வாறு கலப்புற்ற நிலையில் அவர்கள் பெருமளவு உரிமைகளுடனும், சலுகைகளுடனும் ஓரளவு வளத்துடன் வாழ்ந்து வருகின்றனர் என்பதும் புத்திஜீவிகளின் கருத்தாக உள்ளது.



இந்த வகையில் இலங்கையின் மலையகப் பகுதிகளில் குடியேற்றப்பட்ட தமிழ் தொழிலாளர்கள் அண்மைக்காலம் வரை சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் இலங்கை யில் காலம் காலமாக வாழ்ந்துவந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களின் அலட்சியத்திற்கு ஆளானவர்களாக விளங்கினார்கள்.

மேலும் இம்மக்கள் தோட்டக்காட்டான், இந்தியாக்காரன், கள்ளத்தோணி என்றெல்லாம் அழைக்கப்பட்டு அவமதிக்கப்பட்ட வரலாறுகளும் மலையக வரலாற்றில் அதிகமாகவுள்ளன. தொழில் ரீதியான, கல்வி ரீதியான,சமூக ரீதியான நெருக்கீடுகள் பலவற்றுக்கும் இம்மக்கள் முகங்கொடுக்க நேர்ந்தது. முதலாளிமார்களின் உச்ச இலாபம் கருதிய முன்னெடுப்புகளால் இம்மக்கள் உழைப்பு ரீதியாக கசக்கிப் பிழியப்பட்டனர்.

எனினும் உழைப்புக்கேற்ற ஊதியம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் என்பது இன்றும் கூட ஒரு கனவாகவே இருந்து வருகின்றது. தொழில் நிலைமைகளின்போது கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளான தொழிலாளர்கள் கொடுமை தாங்காது உயிரிழந்த சம்பவங்களும் மலையக ஏடுகளில் பதிவாகியுள்ளன.

## சமுதாய உரிமை மீறல்

இலங்கை அரசின் கொள்கைகள் பால், வகுப்பு, இனம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டவில்லை. ஆனால் இதற்கு ஒரேயொரு புறநடை உண்டு.அதாவது தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டு பெருந்தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் கல்வி காலனித்துவ வாதிகளின் தேவைகளுக்கு அடிபணிந்திருந்தது.

சுதந்திரத்துக்குப் பின்னரான சமூக அபிவிருத்தி கொள்கைகளும் கூட அவர்களை கவனத்தில் கொள்ளவில்லை' என்ற பேராசிரியர் சுவர்ணா ஜயவீரவின் கருத்து தொடர்பில் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளதோடு, இம்மக்களின் கல்வி நடவடிக்கைகள் மழுங்கடிக்கப்பட்டதையும் படம் பிடித்துக் காட்டுவதாகவுள்ளது.

சர்வதேச ரீதியாக இருபதாம் நூற்றாண்டில் இடம்பெற்றசிறுபான்மைஇனங்களுக்குஎதிரான சமுதாய உரிமையை சட்ட ரீதியாக இல்லாமல் செய்தது இலங்கையின் சுதந்திரத்தின் மறுபக்க விளைவுகளாகும் என்றும் வலியுறுத்தல்கள் இருந்து வருகின்றன. இதன் மூலம் ஏறக்குறைய 90,000 பேருக்கு பிரஜாவுரிமை மறுக்கப்பட்டது. இதனால் இவர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையிலும் இந்நாட்டில் அரசியல் அதிகாரம் இல்லாத அநாதைகளாகவும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

அரசாங்க உத்தியோகங்கள் மறுக்கப்பட்டதுடன் உரிமைகளைப் பெற்று மேலோங்கி சென்று கொண்டிருந்த ஏனைய இனத்தவர்களால் நசுக்கப்பட்டும் அவதிக்கப்பட்டும் துன்பங்களை சுமந்தனர். இந்நிலையில் ஏனைய இனத்தவர்களுக்கும் மலையக மக்களுக்கும் இடையே பாரிய விரிசல் நிலை காணப்பட்டதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.



இதேவேளை 1955 காலப்பகுதியைத் தொடர்ந்து இலங்கையின் மக்கள் தொகையில் இந்திய வம்சாவளியினர் எண்ணிக்கை படிப்படியாக வீழ்ச்சி கண்டுள்ளது. 2001 ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகையில் 5.1 வீதமாக மூன்றாவது சிறுபான்மை இனமக்களாக தமது எண்ணிக்கையில் சடுதியான வீழ்ச்சியினைக் கொண்டவர்களாக இந்திய வம்சாவளி மக்கள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளனர். இத்தகைய வீழ்ச்சி நிலைக்கு சுதந்திரத்தின் பின்னர் ஆட்சி அதிகாரத்திற்கு வந்த அரசியல்வாதிகளின் தீர்மானமே காரணமாகுமென்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கதாகும்.

மேலும் மலையக மக்களுக்கு வாக்குரிமை வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும், ஏனைய உரிமைகள் சிலவற்றை ஆட்சியாளர்கள் வழங்க எத்தனித்த போதும் இனவாத சிந்தனையாளர்கள் அதற்கு முட்டுக்கட்டையாக இருந்து குரல் கொடுத்த சந்தர்ப்பங்கள் அதிகமாகும். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னராயினும் சரி அல்லது சுதந்திரம் பெற்ற பின்னராயினும் சரி மலையக மக்கள் மீதான நெருக்கீடுகளுக்கு ஒரு போதும் குறைவிருக்கவில்லை என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.

இந்நாட்டில் மலையக மக்களுக்கு உரிமைகளை வழங்குவதைக் காட்டிலும் அவர்களை சகல துறைகளிலும் நிர்வாணப்படுத்தி ஓரங்கட்டுவதையே இனவாத சிந்தனையாளர்கள் முன்னெடுத்தனர். ஒப்பந்தங்களின் ஊடாக அவர்கள் இதில் வெற்றியும் கண்டனர். அத்தோடு காலத்துக்கு காலம் இங்கு ஏற்பட்ட வன்செயல்கள் இம்மக்களின் வாழ்க்கையை கேள்விக்குறியாக்கின. ஒரு அச்ச உணர்வுடன் கூடிய சூழல் இதனால் தோற்றம் பெற்ற நிலையில் மலையக மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிப்படைந்திருந்தது.

1956, 1958, 1960, 1981, 1983, 1986 என்ற அடிப்படையில் காலத்துக்கு காலம் இலங்கையில் வன்செயல்கள் இடம்பெற்றன.இதனால் இந்திய வம்சாவளி மக்களில் ஒரு பகுதியினர் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் வடக்கு,கிழக்கு பகுதிகளுக்கு சென்று குடியேறி

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உலகின் கப்பல் போக்குவரத்தை கடுமையாக பாதிக்கும் தொடர் தாக்குதல்கள்

வேல்ஸ் இல் இருந்து **அருஸ்**

இஸ்ரேலின் மற்றுமொரு கப்பலை கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்த எடுத்த முயற்சி அமெரிக்கா கடற்படையினரால் முறியடிக்கப் பட்டுள்ளது. கடந்த வாரம் போல் அல்லாது இந்த தடவை கடற்கொள்ளையர்கள் போல சிறிய படகுகளில் சென்று கப்பலை கைப்பற்ற ஏமன் படையினர் முயன்றதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

ஏமன் கடற்கரையை அண்டிய ஏடன் வளைகுடாவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது. எனினும் அந்த பகுதியில் கடல் கொள் ளையர்களை தடுக்கும் நடவடிக்கையில் ஈடு பட்டிருந்த அமெரிக்க கடற்படையின் *Arleigh Burke-class destroyer USS Mason* என்ற கப்பல் இந்த தாக்குதலை முறியடித்து கப்பலை மீட்டுள்ளதாக அமெரிக்காவின் மத்திய கட்டளை மையம் தெரி வித்துள்ளது.



லைபீரியாவின் கொடியுடன் பயணித்த சென்றல் பார்க் என்ற பொஸ்போரிக் அமிலத்தை ஏற்றிச் சென்ற கப்பலே கடத்தப்பட்டது. இந்த கப்பல் சோடியக் மரி ரைம் எனப்படும் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட நிறுவனத்திற்கு சொந்தமானது. இந்த நிறுவனம் இஸ்ரேலிய கோடீஸ்வரரான ஏயல் ஒபேர்ஸிற்கு சொந்தமானது. கப்பலை காப்பாற்றியதற்காக அவர் அமெரிக்க கூட்டணிப் படையினருக்கு நன்றி தெரிவித்துள்ளார். கப்பலில் பல்கேரியா, இந்தியா, ஜேர்ஜியா, பிலிப்பைன்ஸ், ரஸ்யா ஆகிய நாடு களை சேர்ந்த 22 பேர் பணியாற்றியுள்ளனர்.



இந்த நடவடிக்கையை தொடர்ந்து கப்பலில் இருந்த 5 கடத்தல்காரர்கள் சிறிய அதிவிரைவு படகில் தப்பிச் செல்ல முற்பட்டதாகவும், அவர்களை அமெரிக்காவின் கடற்படைக்கப்பலில் இருந்த உலங்குவானூர்திகளை பயன்படுத்தி மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் செய்து சரணடைய வைத்து கைது செய்துள்ளதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

எனினும் இந்த தாக்குதலை முறியடிப் பதற்கு ஏமன் படையினர் இரண்டு நடுத்தர பலஸ்ரிக் ஏவுகணைகளை அமெரிக்காவின் கடற் படைக் கப்பல்களை நோக்கி திங்கள் காலை ஏவியதாகவும், ஆனால் அவை கப்பலில் இருந்து 18 கி.மீ தொலைவில் வீழ்ந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் கப்பல்கள் சேதமடையவில்லை. எனினும் இந்த இரு ஏவுகணைகளையும் அமெரிக்க கப்பல் சுட்டு வீழ்த்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையில் யப்பானின் நாசகா ரிக் கப்பலும் அமெரிக்க கப்பல்களுக்கு உதவியை வழங்கியுள்ளன. எனினும் கடத்தல்காரர்கள் எந்த நாட்டவர்கள் என்பதை அமெரிக்கா தெரி விக்கவில்லை. யாரும் இந்த தாக்குதலுக்கு உரிமை கோரவில்லை.




அந்த பகுதி ஏமனின் கட்டுப்பாட்டு பகுதி, சோமாலிய கடற்கொள்ளையர்களின் நடமாட்டம் இந்த பகுதியில் இல்லை. எனவே ஏமனே அதற்கு பொறுப்பாகலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இஸ்ரேலின் கலக்ஸி லீடர் என்ற கப்பலை ஏமன் படையினர் கைப்பற்றியதை தொடர்ந்து அவர்களே இந்த கப்பலையும் கடத்த முற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. அந்த கப்பல் தற்போது ஏமனின் துறைமுகமான கொடியாடா பகுதியில் நிற்கின்றது.

கொடியாடா துறைமுகத்திற்கு சென்றல் பார்க் கப்பலை நகர்த்துமாறு கடத்தல்காரர்கள் மிரட்டி அதனை கொண்டு செல்ல முற்பட்டதாக வும், கப்பலின் தொடர்பாடல்கள் அமெரிக்க கடற்படையினரால் ஒட்டுக்கேட்கப்பட்டதால் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்க மற்றும் பிரித் தானியாபடையினரும், அம்ரே எனப்படும் தனியார் புலனாய்வு அமைப்பும் இந்த நடவடிக்கைகளில் இணைந்து செயற்பட்டுள்ளன.

ஏடன் கடற்கரைய அண்டிய பகுதியில் கப்பலினுள் 8 பேர் பலவந்தமாக ஏறியதை தாம் அவதானித்தாகவும், அதில் இருவர் இராணுவச் சீருடையில் இருந்ததாகவும் அதற்கு அருகில் சென்ற கப்பலில் இருந்து அனுப்பப்பட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் படைத்துறையை சேர்ந்த கடல் வர்த்தக நடவடிக்கை அமைப்பு (யூகேஎம்ரிஓ) என்ற அமைப்பு மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள கப்பல்களை கலக்சி லீடர் கப்பலின் கடத்தலுக்கு பின்னர் தீவிரமா கண்காணித்து வருகின்றது.

அந்த புலானாய்வு நிறுவனம் 1000 இற்கு மேற்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளை கொண்டுள் ளது. கப்பல்களுக்கு பாதுகாப்பாக செல்லும் பாதுகாப்பு அதிகாரிகளை கப்பல்களுக்கு வழங்கும் பணியையும் செய்து வருகின்றது.

அதுவே கடந்த ஞாயிற்றுக்கிழமை(26) வெள்ளை மற்றும் கருப்பு நிற இரண்டு சிறிய படகுகளில் இராணுவ சீருடை தரித்த 8 பேர் கொண்ட அணி சென்றல் பார்க் கப்பலை நோக்கி செல்வதை அவதானித்து தகவல்களை கப்பலுக்கு வழங்கியுள்ளது.

அதற்கு முன்னர் வெள்ளிக்கிழமை இஸ்ரேல் செல்வந்தருக்கு சொந்தமான மற்று மொரு சி.எம்.ஏ சி.ஜி.எம் சைமி என்ற கப்பல் இந்து சமுத்திர பிராந்தியத்தில் ஆளில்லாத தாக்குதல் விமானம் மூலம் தாக்கப்பட்டு சேத மடைந்திருந்தது. ஈரானின் விமானம் தாக்கியதாக கூறப்பட்டது. ஆனால் ஈரான் அதனை மறுத்துள்ளது. கப்பல் தீப்பற்றி எரிந்தபோதும், அது பின்னர் காப்பாற்றப்பட்டது. பணியாளர்கள் யாரும் காய மடையவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இரு வாரங்களுக்குள் தாக்கப்பட்ட 3 ஆவது கப்பல் இது. இஸ்ரேலிய செல்வந்தர்களுக்கு சொந்தமான கப்பல்களே அவை.



ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் இடம்பெற்ற நிழல் போரில் சோடியக் மரிரைம் நிறுவனத்திற்கு சொந்தமான கப்பல்கள் முன்னரும் தாக்கப்பட்டுள்ளன. 2021 ஆம் ஆண்டு இஸ்ரேலின் எண்ணெய்த்தாங்கிக் கப்பலான மேர்செர் steet என்ற கப்பல் மீது ஓமான் கடல் பகுதியில் இடம்பெற்ற ஆளில்லாத விமானம் மூலமான தாக்குதலில் இரு பணியாளர்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

தற்போது கப்பல்கள் செங்கடல் மற்றும் மத்தியதரை கடல் வழியாக பயணிக்கும்போது தமது அடையாளங்களைக் கண்காணிக்கும் ஜி.பி.எஸ் சமிக்சைகளை நிறுத்திவிட்டே (*Automatic Identification System trackers*) தற்போது பயணிக்கின்றன. இதன் மூலம் அடையாளம் கண்டு தாக்குவதில் இருந்து தப்பமுடியும் என அவர்கள் நினைக்கின்றனர். என *MarineTraffic.com* இணையத்தளம் தெரிவித்துள்ளது.

சென்றல் பார்க் கப்பல் இறுதியாக சுயஸ் கால்வாயினூடாக பயணித்து செங்கடல் பகுதி யினுள் நுழையும்போது தனது அடையாளம் காணும் சமிக்கைகளை நான்கு நாட்களுக்கு முன் நிறுத்தியிருந்தது.



எனினும் கப்பலை சரியாக அடையாளம் கண்டு கடத்தல்காரர்கள் அதிவேக விரைவுப்படகில் சென்று கப்பலை கைப்பற்றியுள்ளனர். அப்படி என்றால் கப்பல்களை தமது செய்மதி மற்றும் உளவு விமானங்கள் மூலம் மிகப்பெரும் நாடுகள் கண்காணித்து தகவல்களை வழங்குகின்றதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதனை உறுதிப்படுத்துவதுபோலவே பாரசீக வளைகுடாவினுள் நுழைந்த அமெரிக் காவின் எய்சன்கவர் *USS Eisenhower* என்ற விமானந் தாங்கி கப்பலை ஈரான் எவ்வாறு தொடர்ந்து துல்லியமாக கண்காணித்து வந்தது என்ற காணொளி வெளியாகி பரபரப்பாகியுள்ளது.

அதேசமயம் திங்கட்கிழமையும் ஒரு

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

## அலட்சியப்படு... தொடர்ச்சி ...

னர்.

இன்னும் சிலர் தமிழகத்துக்கு இடம் பெயர்ந்த நிலையில் மேலும் சிலர் சிங்கள மக்கள் செறிவாக வாழுகின்ற காலி, மாத்தறை, இரத்தினபுரி, பலாங்கொடை பகுதிகளில் சிங்கள மக்களுடன் வாழ்வதற்கு பிரயத்தனம் மேற்கொண்டனர்.தமது பேச்சு மொழியைக்கூட சிங்களமாகவோ அல்லது இலங்கையில் வாழுகின்ற இஸ்லாமியர்கள் பேசும் பேச்சுத் தமிழை வருந்தி உள்வாங்கிக்கொண்டு வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

### சமத்துவமான கல்வி

இந்திய வம்சாவளி மக்கள் இந்நாட்டில் தனித்துவமானஒருசமூகமாகமேலெழும்பியுள்ள நிலையில் அவர்களை தனித் தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ச்சியாகவே விடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு அரசியல் யாப்பு ரீதியாக அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்த அரசாங்கம் முன்வருதல் வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் இக்கோரிக்கைகள் இன்னும் செயல்வடிவம் பெறுவதாக இல்லை.

இதனிடையே கடந்த காலத்தில் தேர்தல் விஞ்ஞாபனங்கள், வரவுசெலவு திட்ட முன்மொழிவுகள் போன்ற பலவற்றிலும் மலையக மக்களின் அபிவிருத்தி கருதி முன்வைக்கப்பட்ட வாக்குறுதிகள் வெறும் வாக்குறுதிகளாகவே முற்றுப்பெற்றுவிட்ட நிலையில் மேலும் மேலும் வாக்குறுதிகளால் ஏமாற்றப்பட்ட ஒரு சமூகமாக மலையக சமூகம் இருந்து வருகின்றது.

இந்நிலையில் அண்மையில் மலையக மக்கள்இந்தியாவில்இருந்துஅழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் பூர்த்தியடைவதை முன்னிட்டு நீர் வழங்கல், தோட்ட அபிவிருத்தி உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் 'நாம் 200' என்னும் மகுடத்திலான தேசிய நிகழ்வு இடம்பெற்ற நிலையில் இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையக மக்கள் தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி இருக்கின்றார்.

மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்கான தீர்மானம் அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை நடைமுறைப்படுத்துவதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தனதலைமையில்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட பயிர்ச் செய்கையில் புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்த விளைகின்றோம். அதன்படி அங்கு வாழும் மக்களுக்கு காணிகளை வழங்கி அதில் தேயிலையை பயிரிட்டு அவற்றை தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்கும் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

மலையக மக்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய 10 பேர்ச்சஸ் காணியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மலையக மக்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் அனைத்து பிரதேச செயலக பிரிவுகளிலும் எவ்வித இன, மத வேறுபாடுகளுமின்றி சமத்துவமான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வாக்குறுதிகள் பலவற்றையும்ஜனாதிபதிவழங்கிஇருக்கின்றார். இதில் பெருந்தோட்டத் துறையில் புதிய முறை அறிமுகமென்பது ஏற்கனவே கம்பனியினர் முன்வைத்திருந்த வெளியார் உற்பத்தி முறையினை நிழற்படுத்துவதாக உள்ளது.

மலையக மக்கள் நிலச்சொந்தக்காரரர்களாக மாற்றம் பெறுவதற்கு இம்முறை அடித்தளமாக அமையும் என்று ஏற்கனவே புத்திஜீவிகள் இது தொடர்பில் கருத்து தெரிவித்திருந்தனர். எவ்வாறெனினும் ஜனாதிபதி வழங்கியுள்ள வாக்குறுதிகள் எதிர்வரும் தேர்தல்களை மையப்படுத்திய போலி வாக்குறுதிகளாக அல்லாமல் நடைமுறைச் சாத்தியம் மிக்கதாக அமைய வேண்டும் என்பதே சகலரினதும் எதிர்பார்ப்பாகும். இதேவேளை மலையக மக்கள் இனியும் வாக்குறுதிகளை நம்பி ஏமாறுவதற்கு தயாராக இல்லை.

• • •

## இலங்கைக்கு சர்வ ... தொடர்ச்சி ...

ஏற்படும் துன்பங்களுக்கு மேலதிகமாக, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனையின்மையைகாண்பதுடன். உயிர்ப்பழித்ததற்கான குற்ற உணர்ச்சியுடனும் வாழ்கின்றார்கள்.

உண்மைக்கும் நீதிக்குமான அவர்களது தேடலில், இறந்து போனவர்களையும் காணாமற் போனவர்களையும் தொடர்ந்து நினைவுகூருவது தங்களது தார்மீக மற்றும் சமூகப் பொறுப்பென உயிர்தப்பியவர்கள் கருதுகின்றார்கள். நவம்பர் 27இல் வெறுமனே அவர்களதுகுடும்பங்களும் நண்பர்களும் மட்டுமன்றி, மாறாகமுழுச் சமூகமே அவர்களின் தியாகங்களையும் கூட்டுத் துன்பத்தையும் நினைவுகூருகின்றது.

உயிர்தப்பி வெளிநாடுகளுக்கு வந்த தமிழர்கள் பொதுஇடங்களிலும் தனியாகவும் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான தங்களது உரிமையினை மீளவும் பெற்றுக்கொள்வதை பல ஆண்டுகளாக நாம் கண்டிருக்கின்றோம். இந்தச் செயற்பாட்டில் உயிர்தப்பி, சாட்சியங்களாக இருப்பதன் நிதர்சனத்துடன் அவர்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். எதிர்கால சந்ததிகளும் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக தாங்கள் பட்டதனிப்பட்ட துன்பங்களை மட்டுன்றி, தங்களது சமூகங்களது துன்பங்களதும் நினைவுகளையும் உயிர்ப்புடன் வைத்திருப்பதற்காக புதிய வழிகளைத் தேடிக் கொள்கின்றார்கள்.

எந்தவொரு அடக்குமுறையும் இறந்தவர்களை நினைவுகூருவதற்கான மனிதனுடைய தேவையை, குறிப்பாக அது உங்களது பிள்ளையாவோஅல்லது பெற்றோராகவே இருக்கும்பட்டத்தில், அடக்கிவிடப்போவதில்லை. போர் முடிந்த பின்னர், பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது, சிறைக்காவலர்கள் பழிவாங்கு வாங்குவார்கள் என்பதை முழுமையாகத் தெரிந்திருந்தும், நவம்பர் 27ஆம் திகதி அதிகாலையில் எழுந்து மெழுகுதிரி ஏற்றியதாக சித்திரவதையிலிலிருந்து உயிர்தப்பிவந்த ஒருவர் விபரித்தார். இருப்பினும், அவர்களிடம் எஞ்சியிருக்கும் கடைசி சுயமரியாதை அதுவாகவே இருந்ததுடன், அதற்கான அந்த விலையைக் கொடுக்கவும் தயாராக இருந்தார்கள்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு ஒன்றினை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார் போரில் உயிர் தப்பியவர்கள் அவர்களுக் கிருக்கும் வருத்தப்படுவதற்கான உரிமையைக் கூட பயன்படுத்திக்கொள்ள முடியாதுள்ள, நினைவு நிகழ்வுகளில் கலந்துகொள்வதன் மூலமாக தங்களது மனவலிகளுக்கு ஆறுதல் தேடக்கூட முடியாதுள்ள சூழ்நிலையில், இவ்வாறான ஒரு அமைப்பில் உயர்தப்பியவர்கள் கலந்துகொண்டு, தங்கள் வாக்குமூலத்தை வழங்குவது சாத்தியமல்ல.

உண்மயை கண்டறியும் ஆணைக்குழு நம்பகரமானதாகச் செயற்பட்டு, வெற்றியடைய வேண்டுமாக இருந்தால், அரச ஆதரவுடன் நடைபெறும் வன்முறைகள் நிறுத்தப்படுவதுடன், நவம்பர் 27ஆம் திகதி நடை பெறும் நிகழ்வுகளைப் பாதுகாப்புப் படைகள் கண்காணிக்காது விடுவதுடன் என்பதுடன், இவற்றை ஏற்பாடுகள் செய்பவர்கள் அல்லது பங்குபற்றுபவர்களுக்கு எதிராக எந்தவொரு பழிவாங்கும் நடவடிக்கையும் இருக்கவும் கூடாது.

இந்த அடக்குமுறையைக் கண்டுஇராஜதந்திர சமூகம் அமைதிகாக்காது இருப்பதுடன். சாதாரண உடைகளில் வரும் அதிகாரிகள் புகைப்படங்கள் எடுக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச கண்காணிப்பாளர்களையும் அனுப்பவேண்டும்.

• • •

## மக்கள் என்றும் ... தொடர்ச்சி ...

கண்டுள்ளது என்பதை பறைசாற்றுகின்றது.

அவற்றைவிட ஏறத்தாழ எழுபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் என கணிக்கக்கூடிய ஒரு மக்கள் கூட்டத்தில் ஒரு குடிபோதை இல்லை, ரவுடித்தனம் இல்லை, கூச்சல்,குழப்பங்கள் இல்லை , ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கூட இல்லை இவ்வாறாக இந் நினைவேந்தலில் இவ்வளவு மக்கள் பங்குபற்றியதானது தமிழ் தேசியம் மீது அந்த மக்கள் கொண்ட ஒப்பற்ற பற்றுஉருதியையே எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாமல்மக்கள்எல்லாம்ஒன்றுபட்டுள்ளார்கள் என்பதையும் அதனை சரியான வழித்தடத்தில் கொண்டுசெல்ல ஒரு தலைமையின் வெற்றிடத்தையுமே சுட்டி நிற்கிறது.

மேலும் நேற்றைய அனுபவத்தின் படி அதிக சனத்தொகையை கருத்திலெடுத்து இனிவரும் காலங்களில் 2008 காலப்பகுதிக்கு முற்பட்ட காலத்தில் நிகழ்ந்தவை போல தனிப்பட்ட அறிவித்தல்களை தவிர்த்து எல்லா துயிலும் இல்லங்களின் பணிக்குழுவுடனும் இணைந்து பொதுவான ஒரு குரல் அறிவிப்பை வெளியிடுதல் சிறப்பாக அமையும்.

அத்துடன் துயிலும் இல்லத்தில் இருந்து டிப்போ சந்தி வரைக்குமான போக்குவரத்தை சீர்செய்து ஒழுங்குபடுத்துவதும் பணிக்குழுவின் கடமையில் உள்ளெடுப்பது சிறப்பாக அமையும் (பலரால் முணுமுணுக்கப்பட்ட விடயம்) ஏனெனில் நேற்றைய சன நெரிசல் ஆனது முரன் பாடுகள் இல்லாவிட்டாலும் துயிலும் இல்லத்தில் இருந்து டிப்போ சந்திக்கு செல்வதற்கு சாதாரனமாக1.45 மணித்தியாலங்கள் எடுத்துள்ளது.

மீண்டும் துயிலும் இல்ல மக்கள் எழுச்சியானது ஏதோ ஓர் வெற்றிடம் மட்டும் இடைவெளியாக உள்ளதே தவிர மக்கள் என்றும் உணர்வு ரீதியாக ஒன்று படுவார்கள் என்ற செய்தியை பலரது கன்னங்களில் ஓங்கி அறைந்திருக்கின்றது.

**முல்லையூர் இராஜ்குமார்**

## உலகின் கப்பல்... தொடர்ச்சி ...

சிறிய படகில் 3 பேர் மற்றுமொரு கப்பலை நோக்கி சென்றதாகவும், அதனை கண்காணித்து தாம் தகவலை அனுப்பியதும் அவர்கள் தமது திட்டத்தை கைவிட்டு சென்றுவிட்டதாகவும் யூகேஎம்ரிஓ தெரிவித்துள்ளது.

அதாவது தற்போதைய நிலை உலகின் கப்பல்போக்குவரத்தை கடுமையாக பாதிப்பதுடன், பல்முனைவாக்கம் பெற்ற உலக ஒழுங்கு பல மடைவதற்கும் வழிவகுக்கும்

• • •

## கட்டம் கட்டமாக ... தொடர்ச்சி ...

பிளிங்டன், இஸ்ரேல் அரச தலைவருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதுடன், பாலஸ்தீன மற்றும் அரபு நாட்டு தலைவர்களையும் சந்தித்து வருகின்றார். போர் நிறுத்தம் நல்ல பலன்களை தருவதாகவும், அது நீடிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஹாசா பகுதி மீது கடந்த இரண்டு மாதங்களாக இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்களில் இதுவரையில் 15000 பேர் கொல்லப்பட்டுள்ளனர் அவர்களில் 40 விகிதமானவர்கள் சிறுவர்கள்.

## இளையோரே சிகரம் நீங்கள்

# எல்லைகளில்லா உலகம் செல்வோம்

கவிதா ஆல்பர்ட்

ஒருலகைத் தான் இறைவன் படைத்தார். அதில் பிரிவினைகளை நாம் படைத்தோம். நாடுகள் என்றும், இனங்கள் என்றும், மதங்கள் என்றும், மொழிகள் என்றும், சாதிகள் என்றும், வரைய றைகளுக்குள் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பேதமை உணர்வு பெருகி வருகிறது,

இப்படித் தலைமுறையானது தடுமாறி நடந்தால், எதிர்கால உலகம் எப்படி இருக்கும்? கற்பனை செய்து பாருங்களேன். நிலவுலகுக்கு எல்லை தாண்டி, வான்பரப்புக்குள் எல்லை என்றாகி, கடலுக்கும் எல்லை வரையறை செய்து, கைது நடவடிக்கைகளையும் தாண்டி, அழிக்கும் நிலைக்கு அதிவேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்.

இளையோர் இந்த யுத்தத்தில் பலியாடுகளாகும் பரிதாப நிலையை உலகம் முழுவதும் பார்க்கிறோம். 'ஏன்' என்கிற கேள்வி கேட்காத வாழ்க்கை இல்லை. ஆனால் அழிவுறும் இக் கொடிய அரங்கேற்றங்களை அரங்கேற்றவும், அழிந்து போகவும் பலியாடுகளாக நிற்கும் இளையோரின் உள்ளங்களில் ஏன்? எதற்கு? என்கிற கேள்வி ஏன் எழவில்லை.



ஏனென்றால், ஆளும் வர்க்கம், தங்களது சுகங்களுக்காக, சுகபோக வாழ்வுக்காக, இந்த அப்பாவி இளையோர்களை அடிமைகளாகப் பயிற்றுவித்துக் கொண்டிருக்கிறது. இவர்கள் தங் கள் உரிமைக்காக அறவழியில் போராட முன் வந்தாலும், அவர்களைப் போராட்டக் காரர்களாக வும், தீவிரவாதிகளாகவும் சித்தரித்து, அழிக்கத் துடிக்கின்றனர்.

நசுக்கப்படும் புழுக்கள் கூட தாங்கள் வாழ வேண்டும் என்பதற்காக தங்களால் இயன்றவரை போராடத் துடிப்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அந்தப் புழுக்களின் உணர்வு கூட நம் இளையோருக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக எல்லையைக் காட்டி, போதையை ஊட்டி, களத்தில் அவர்களைப் பலியாடுகளாகப் பலியிடுகின்றனர்.

உலகம் என்னும் உயரிய வரைபடத்தில் இளமைப் பருவத்திலேயே பூமியில் இரத்தம் சிந்தி அடங்கிய உயிர்கள் ஒன்றா இரண்டா? கோடிக்கணக்கான உயிர்களை இந்த உலகம் இப்படி அழித்துக் கொண்டிருப்பதை காணும் மனிதநேய உணர்வாளர்களின் உள்ளம், அன்றாடம் இறைவனை நோக்கி "இந்த மனித உயிர்களை இறைவா, நீயாவது காப்பாற்ற மாட்டாயா? என்கிற கருணை மனுக்கள் காற்றில் கலந்துகொண்டு தான் இருக்கின்றன.

இறைவனும் அவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதில்லை. எத் தனையோ பாடங்களைக் கற்றுக்கொடுத்தும், படிப்பினை பெறாத, இறுமாப்பு மிக்கவர்களாகவே இருந்து வருகிறோம். சுயநலமும், இறுமாப்பும், ஆணவமும் போதையாகி, இன்றைய தலைமுறை யினரை அரும்புப் பருவத்திலேயே அல்லல்பட வைக்கிறது.

பிஞ்சு மனங்களிலே நஞ்சு கலந்து, விடுகிறது. தனிமனித வட்டம், கணினிவழிக் கல்வித் திட்டம், செல்பேசித் தேடல்கள், அலைபேசி மோகம் அனைத்தும் கருவிகளின் கட்டுப்பாட்டுக்குள் நம்மைக் கடத்திச் சென்று, ரோபோக்கள் தான் இனி உலகை ஆளப் போகின்றனவோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறது. "டிஜிட்டல் மயம்" என்கிற நவீன வார்த்தை புதிய சரித்திர விந்தைக்குள் நம்மைக் கடத்திச் சென்று, நாகரிகத்தில் நம்மை உயர்வு நிலையில் நிற்க வைப்பது போன்ற ஒரு மயக்க நிலையை உண்டுபண்ணி, முற்றிலுமாக கருவிக்குள் கால் வைத்து, கண்ணிக்குள் சிக்க வைக்கும் ஒரு மாய வலை என்பதை உணராமல் நாமும் மயங்கிக் கொண்டிருக்கிறோம்.

இயற்கையை அழித்து, செயற்கையோடு வாழப் பழகிக்கொண்டிருக்கும் நாம், புவி வெப்பமயமாதலையும், கோள்களின் விபரீத விளைவுகளையும் அறியாமல், ஆடம்பரம் என்கிற ஒற்றைச் சொல்லுக்குள் சுயநல மயக்கம் கொண்டவர்களாக, நம் வீட்டுச் சிறை என்கிற எல்லைக் கோட்டுக்குள் வாழ்வதே உயர்வு என்கிற மனநிலைக்கு வந்துவிட்டோம். அது தான் நம்மை மனநோயாளிகளாக, பயங்கரவாதிகளாக மாற்றப் போகும் நவீன சிறைச்சாலை என்பது இப்போது நமக்குப் புரியப்போவதில்லை.



'கூட்டுக்குடும்பம்' என்கிற இலக்கணத்தை நாம் எப்போது தொலைக்கத் தொடங்கினோமோ அப்போதே சவால்களும், சங்கடங்களும் நமது தலைமுறையைத் தொற்றிக்கொள்ளத் தொடங்கிவிட்டது. அதனால் தான் குழந்தைகள் பிறக்கும் போதே தங்களுக்கென்று ஆடம்பர எல்லையை வரையறுத்துக் கொள்ளும் அளவுக்கு இன்றைய நவீன பெற்றோர்கள் பிள்ளை களுக்கு வாழ்வியலைக் கற்றுக்கொடுக்க முன் வருவதில்லை.

இன்றைய தலைமுறையினரோடு, இருக் கின்ற வசந்தமும் முடிவுக்கு வந்து விடுமோ, என்பது சமூக ஆர்வலர்களின், மனித நேயர்க ளின் கேள்வி, அலைகளாகக் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கின்றன. நட்பு, உறவு என்கிற உன்னத கலாசாலைகளையும், கலாச்சார மையங்களை யும் உலகம் முழுவதும் உருவாக்குவதே நமது அடுத்த தலைமுறை அமைதியாக வாழ்வதற்கு நாம் உருவாக்கும் எதிர்காலத் திட்டமாக இருக்க வேண்டும்.

உலகம் முழுவதும் சிட்டுக்களாய் நம் முறையினர் பறவைகளைப் போலச் சுதந்திரமாகப் பறந்து செல்ல முடிவதில்லை. காரணம் நாடுகளி டையே உள்ள அனைத்துவிதமான எல்லைக் கோடுகள், அகதிகள் வருகை, எதிராளிகள் ஊடுருவல், தீவிரவாதிகள் அச்சுறுத்தல், இப்படிப் பல காரணிகளும் எல்லைக் கோடுகளுக்கு அவசி யமாக அமைகின்றன.

இவை ஏன் உருவாகவேண்டும்? என்பதை நாடுகளும், எதிர்காலத் தலைமுறையினரும் ஆராய முற்படுவோமாயின், வள்ளுவர் கூறியபடி, "அன்புக்கும் உண்டோ அடைக்குந் தாழ்" என்கிற உயர்ந்த இலட்சியம் இதயங்களை இனிமையாகத் தாலாட்டும். அப்போது எல்லைகளில்லா உலகம் அமைப்பது சாத்தியமாகும்.

பாடத்திட்டங்களில் ஒருமைப்பாட்டுக் கல்வி உதயமாக வேண்டும். உயர்ந்த எண்ணமும், சிறந்த பண்பும் கொண்ட இளையோர் இணைந்து, ஒருமைப்பாட்டுச் சமூகத்தைக் கட்டியெழுப்ப முன்வரவேண்டும். நாம் பிறந்த இடத்திலும் சரி, வாழும் இடத்திலும் சரி.

நமக்கு வாழ்வு கொடுப்பவர்களுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

சமூகம் வேறுபாடுகளால் கட்டமைக்கப் பட்டிருந்தாலும், வேற்றுமையில் ஒற்றுமை என் கிற உயர்ந்த சிந்தனை, எல்லைக் கோடுகளை உடைத்து, ஒருமைப்பாட்டுக் கூடாரத்தை உலகில் அமைக்கும். போர்களில்லா உலகம் செய்ய வேண் டும். விவசாயம் காக்கப்பட வேண்டும். பசி, பிணி இல்லாத உலகம் உருவாக்கப்பட வேண்டும். அப்போது எல்லைகளில்லா உலகை நம்மால் உரு வாக்க முடியும்.

தொடரும்

### நாங்கள் ஒன்று ... தொடர்ச்சி ...

நாயகம் கோவிந்தன் கருணாகரம் தெரிவித் திருந்தார். இவ்வாறான நிலைப்பாடுகள் இன்று தமிழ் மக்கள் மத்தியில் அதிகரித்துள்ளது.

எது எவ்வாறாயிருந்தாலும் வடகிழக்கில் தமிழ் தேசிய கட்சிகளுக்கு இடையே ஒற்றுமை ஏற்படாதவரையில் சிங்கள தேசத்தின் அடக்கு முறைகள் என்பதை எதிர்கொள்ளமுடியாத நிலையே ஏற்படும்.

மாவீரர்கள் எந்த கனவுடன் இந்த மண்ணில் விதையானார்களோ அந்த கனவை நிறைவேற்ற வேண்டியபொறுப்பு இந்த மண்ணில் உள்ள தமிழ் தேசிய சக்திகளுக்கும் புலம்பெயர்ந்துவாழும் தமிழ் தேசிய சக்திகளுக்கும் உள்ளது. இதனை நிறைவேற்றமுழுமூச்சுடன் செயற்படும்போதே இந்த மண்ணுக்காக வித்தாகிய மாவீரர்களின் கனவினை நிறைவேற்றமுடியும்.

வெறுமனே துயிலும் இல்லங்களில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தினால் மட்டும் போதும் என்று யாரும் கருதினால் அந்த மாவீரர் களின் ஆத்மா என்பது உங்களை ஒருபோதும் மன் னிக்காது என்பதே உண்மையாகும்.

• • •

### தமிழ் மக்களுக்கு ... தொடர்ச்சி ...

போன்று உடை அணிந்து சென்ற சிறுவர்களின் இல்லங்களுக்கு கடந்த வியாழக்கிழமை(30) சென்ற இலங்கை கவல்துறையினர் சிறுவர் கள், அவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரையும் கோப்பாய் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு வருமாறு அழைத்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன. அதேசமயம், அவர்களின் உடைகளையும் காவல் நிலையத்திற்கு எடுத்தும் சென்றுள்ளனர்.